## திருவொற்றியூர்

# வடிவுடையம்மன் கோயில் தேரோட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் வடம் பிடித்து இழுத்தனர்!!

திருவொற்றியூர், மார்ச். 6

திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவில்தேரோட்டம்ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரைவடம்பிடித்து இழுத்தனர்.

திருவொற்றியூர் தியாகராஜசுவாமிஉடனுறைவடிவுடையம்மன் கோவில் 2ஆயிரம்ஆண்டுகள்பழமை வாய்ந்தது மிகவும் பிரசித்தி பெற்றது இக்கோவிலில் ஆண்டுதோறும் மாசி பிரம்மோற்சம் நடைபெறும்.

இந்த ஆண்டு 29 ந் தேதி கொடியேற்றத்துட ன்தொடங்கியது.விழாவின் முக்கியநிகழ்வானசந்திரசேகரர் திருத்தேர் உற்சவம் இன்று காலை8.30மணியளவில் 44அடி உயரமுள்ளதேர்சன்னதி தெருவில் இருந்து கைலாய வாத்தியங்கள் முழங்க சிவனடியார்கள்நடனமாட சங்க நாதம் முழங்க பச்சை கொடி அசைக்க ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து ஒற்றீஸ்வரா தியாகராஜா என்றுபக்தி கோஷங்களைஎழுப்பிதேரைவடம் பிடித்துஇழுத்தனர்தேர்சன்னதி தெருவில் புறப்பட்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் வந்து தெற்கு மாடவீதிமேற்குமாடவீதிவடக்கு மாடவீதிகள் வழியாக மீண்டும்திருவொற்றியூர்நெடுஞ்சாலை வழியாக மீண்டும் சன்னதி தெரு வந்து தேர் நிலையை வந்தடைந்து.

தற்போதுதிருவொற்றியூர் நெடுஞ்சாலையில் தற்போது மெட்ரோரயில் பணிகள்நடைபெற்று வருகிறது, பக்தர்கள் மற்றும் கோவில் நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்று தியாகராஜர் கோவில் திருத்தேர் செல்வதற்கு வசதியாக காலடிப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் மார்க்கெட் வரையிலானஒரு கி.மீட்டர் துாரத்திற்கு45அடிக்கும்உயரமாக துாண்களும் மேல் வழிப் பாதைகளும் செல்வதால் தேர் மெட்ரோ ரயில் துாண்களுக்கு இடையே சென்றதை பக்தர்களும் பொதுமக்களும் ஆச்சரியமாக பார்த்து வணங்கி சென்றனர் சிலர் தங்கள் செல்போன் களில் படம் பிடித்தனர்.

தேரோட்டத்தில் திருவொற்றியூர் மாஜிஸ்ட்ரேட் வரலட்சுமி முன்னாள் எம்எல்ஏ கே குப்பன் கோவில் உதவி ஆணையர் சித்ரா தேவி தொழிலதிபர் கே. கார்த்திக் ஆர்.வி.ராமலிங்கம் சாந்தகுமார் த.ஜெய்கணேஷ் உட்பட சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மற்றொரு முக்கிய நிகழ்வான, திருக்கல்யாணம், 8ம்தேதிநடக்கிறது.10ம்தேதி இரவு, 18 திருநடனம், தியாகராஜர் பந்தம் பறி உற்சவத்துடன் விழா நிறைவுறும்.

தேரோட்டத்தைமுன்னிட்டு உதவிவண்ணாரப்பேட்டை துணை கமிஷனர் சுப்புலட்சுமி தலைமையில் உதவி ஆணையர்கள் ஆனந்தகுமார் உக்கிரபாண்டி அமல் தாஸ்ஆய்வாளர்கள் ஆரோக்கியராஜ் ராஜ்குமார் தலைமையில் ஏராளமானகாவல் துறையினர்பாதுகாப்புபணியில் ஈடுபட்டிருந்தனர்

தொண்டு நிறுவன த்தினர் பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் தேரோட்டத்தைமுன்னிட்டுகோவில் நிர்வாகத்திற்கும் காவல் துறை இருக்கும் காவல்துறையினருக்குஉதவினர்ஏராளமானோர் அன்னதானம் குடிநீர் குளிர்பானங்கள் வழங்கினர்.



திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவில் தேரோட்டம் இன்று காலை நடைபெற்றது. தேரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்.